**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*****

**பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரும் இந்திய உயர் ஸ்தானிகரும் 'கொம்பிளாஸ்ட்' (COMPLAST) 2019 கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்**

இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் கௌரவ நவீன் திசநாயக்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் இன்று 6 ஆவது கொம்பிளாஸ்ட் (முழுமையான பிளாஸ்டிக் கண்காட்சி) கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். சர்வதேச இறப்பர் எக்ஸ்போவின் 3ஆவதும் மற்றும் கொம்எக்ஸ்போவின் (முழுமையான உற்பத்தி எக்ஸ்போ) 4 ஆவது கண்காட்சிகளும் கூட ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பி.எல்.யூ. ரத்னமலல, இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிலையத் தலைவர் திரு. கௌஷால் ராஜபக்ச, ஸ்மார்ட் எக்ஸ்போஸ் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான திரு.சுவாமிநாதன், இந்திய பிளாஸ்டிக் ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபையிலிருந்தன (PLEXCONCIL) இந்தியப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பிரமுகர்களும் இதன்போது பிரசன்னமாக இருந்தனர்.

இந்தியாவிலிருந்து சுமார் 35 காட்சிப்படுத்துனர்கள் கண்காட்சியில் கலந்து கொள்கின்றனர். இந்த நிறுவனங்கள் PLEXCONCIL மற்றும் இந்திய அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சு என்பவற்றினால் ஆதரவளிக்கப்படுகின்றன.

கௌரவ அமைச்சர் நவீன் திசநாயக்க, இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான வலுவான இருதரப்புப் பிணைப்புகள் பற்றிப் பேசினார். இலங்கையில் இறப்பர் தொழில்துறையின் அபிவிருத்திக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும் பேசினார். மேலும் கூட்டிணைதல்களுக்கு பெருமளவிலான ஒரு சாத்தியம் அங்கு உள்ளதையும் சுட்டிக்காட்டினார். இலங்கை இறப்பர் தொழிலின் பிரதான திட்டத்தின் கீழ் குறிக்கப்பட்ட இலக்குகளைப் பயனுறுவதற்கு புத்தாக்க மாதிரிகளுடன் முன்வருமாறு இத்தொழில்துறையினரைக் வேண்டிக் கொண்டார்.

உயர் ஸ்தானிகர், தனது உரையில், அண்மைய கண்காட்சிகளில் இந்திய நிறுவனங்களின் பெருமளவிலான பங்குபற்றுதல் கடினமான சமயங்களின் போது இலங்கையுடனான இந்தியாவின் ஒருமைப்பாட்டின ஒரு பிரதிபலிப்பாக உள்ளதைக் குறிப்பிட்டார். மூலப்பொருள் அடிப்படை, செயற்றிறனளவு, உட்கட்டமைப்பு மற்றும் திறன் தன்மையுடனான மனிதவளம் என்பவற்றின் அடிப்படையில் இந்திய பிளாஸ்டிக் நிறுவனங்களால் அளிக்கப்படும் சாத்தியக்கூறுகள் பற்றியும் அவர் பேசினார். சுற்றுச்சூழல் ரீதியாக நிலைபேண்தன்மையுடனான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பிளாஸ்டிக் கழிவு பிரச்சினை பற்றி கவனம் கொள்வதற்கான தேவையை அவர் சுட்டிக்காட்டினார்.

கண்காட்சிகள் ஆகஸ்ட் 11, 2019 அன்று நிறைவுபெறும்.

*******

கொழும்பு
ஆகஸ்ட் 9, 2019